MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 29.05.2020 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 694 | **மன்றப்பொருள் எண்.1**<br>மேலூர் நகராட்சியில் கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் அனைத்து ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஆன்லைனில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் உரிய ஆவணங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்படுவதை கூர்ந்தாய்வு செய்து அனுமதி வழங்கவும், ஆக்கிரமிப்பு தொடர்பான மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கவும், நகரில் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ள பேனர்கள் மற்றும் விளம்பர பதாகைகள் அகற்றும் பணி மேற்கொள்ளவும்,ம், நீதிமன்ற வழக்குகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைப்பாளர் பணியினையும் **நகரமைப்பு ஆய்வர்** மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தை பூர்த்தி செய்வது அவசியமாகிறது.<br>பல்வகை கேட்பு தொடர்பான பணிகள் அனைத்தையும் பார்த்துவரும் பணிகளுடன் கூடுதலாக பணியில் உள்ள இளநிலை உதவியாளர்களை கொண்டு பணிமேற்கொண்டுவருவதால் கூடுதல் பணி சுமை ஏற்படுகிறது. இதனால் **இளநிலை உதவியாளர்** பணியிடம் பூர்த்தி செய்வது அவசியமாக உள்ளது.<br>தினசரி நாள் ஒன்றுக்கு 100 பக்கங்களுக்கு மேல் தட்டச்சு செய்யப்பட வேண்டியுள்ளதால் எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி உள்ளிட்ட அன்றாட தினசரி அலுவல்களுக்கு **தட்டச்சர்** பணியிடத்தை பூர்த்தி செய்வது அவசியமாக உள்ளது.<br>இந்நகராட்சியில் பொருத்துநர் பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை என்பதால் மின் மோட்டார் ஓட்டுவது , நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகள் திறப்பது போன்ற இன்றியமையாப் பணிகளை மின்கம்பி உதவியாளரை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதால் **மின்கம்பி உதவியாளர்** பணியிடத்தை நிரப்புவது அவசியமாக உள்ளது.<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகள் சேகரித்து மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை பிரித்து உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாலும், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும், தூய்மை பணியாளர் பணியிடம் மிகவும் அவசியமாக உள்ளதால் **தூய்மை பணியாளர்** பணியிடத்தை பூர்த்தி செய்ய அவசியமாக உள்ளது.<br>தற்போது நிதித்துறை அரசாணை எண்.248 நாள்.20.05.2020 அரசாணையில் புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு தடைவிதித்தும், ஏற்கனவே உள்ள காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்ய பணியாளர் குழு | அனுமதிக்கப்பட்டது |

அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்டுள்ள பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள மேற்கண்ட அரசாணையிலிருந்து விலக்களிக்கவும், கீழ்க்காணும் காலிப்பணியிடங்களை நிரப்ப அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | காலிப்பணியிடத்தின் பெயர் | காலிப்பணியிடத்தின் எண்ணிக்கை | பணியிடம் காலியேற்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | நகரமைப்பு ஆய்வர் | 1 | 14.10.2016 |
| 2. | இளநிலை உதவியாளர் | 1 | 01.12.2019 |
| 3. | தட்டச்சர் | 1 | 01.02.2013 |
| 4. | மின்கம்பி உதவியாளர் | 1 | 01.05.2020 |
| 5. | துப்புரவு பணியாளர் | 1 | 05.04.2020 |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

695

**மன்றப்பொருள் எண்.2**

மேலூர் நகராட்சி பகுதிகளில் விற்பனை/பாகப்பிரிவினை செய்யப்படும் கட்டிடங்களுக்கான சொத்துவரி பெயர்மாற்றம் செய்வதற்கு பத்திரப்பதிவன்று சொத்து மதிப்பின் அடிப்படையில் 01.06.2020 முதல் கீழ்க்காணும் விகிதாசாரத்தின்படி வசூல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பத்திரப்பதிவன்று சொத்துமதிப்பு | ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வரப்படும் தற்போதைய கட்டணம் | 01.06.2020 முதல் வசூலிப்பதற்கு நிர்ணயம் செய்யப்படும் கட்டணம். |
|---|---|---|---|
| 1 | 50,000/– ஆயிரம் வரை | – | ரூ.500/– |
| 2 | 50,000/– முதல் 1,00,000/– வரை | – | ரூ.750/– |
| 3 | 1,00,000/– முதல் 5,00,000/–வரை | – | ரூ.1000/– |
| 4 | 5,00,000/– முதல் 10,00,000/–வரை | – | ரூ.2000/– |
| 5 | 10,00,000/– லட்சத்திற்கு மேல் | – | ரூ.3000/– |

அங்கீகரிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மேலூர் நகராட்சியில் மேற்கண்ட இனங்களுக்கு இதுநாள்வரை கட்டணம் நிர்ணயிக்கப்படாததால் நகராட்சியின் நிதி பற்றாக்குறையை தவிர்த்து வருவாயினை பெருக்கும் நோக்கில் மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை 01.06.2020 முதல் வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.674/2020/எப்1 | |
| 696 | **மன்றப்பொருள் எண்.3**<br>மேலூர் நகராட்சியின் வருவாயை பெருக்கும் நோக்கில் கட்டிட உரிமக்கட்டணத்தை 01.06.2020 முதல் திருத்திய கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்டது |

| **விபரம்** | | ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரப்படும் தற்போதைய கட்டணம் ரூ. | 01.06.2020 முதல் நிர்ணயம் செய்யப்படும் உத்தேசிக்கப்படும் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1) மனை அனுமதி | | 200 | 500 |
| 2) குடிசை நீங்கலாக ஏனைய கட்டிடங்கள் கட்டவோ கூடுதலாக அனுமதி வழங்க (தார்சு) கட்டிடம் தார்சு மற்றும் ஒரு தகரம் ஏ.சி.ஷீட் போன்றவை சேர்ந்த கட்டிடம் அடித்தளம் | 10 சதுர மீட்டருக்கு 1 அதன் பாகத்திற்கும் | 200 | 500 |
| 3) தரைத்தளம் | ,, | 200 | 750 |
| 4) முதல்தளம் | , | 300 | 1000 |
| 5) 2வது தளம் | ,, | 360 | 1250 |
| 6) 3ஆம் தளம் | ,, | 400 | 1500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 7) 4ஆம் தளம் | „ | 500 | 2000 | | |
| | 8) குடிசைஅல்லாத கீற்றுகூரை கட்டிடம் கட்ட | 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | 300 | 900 | | |
| | 9) சுற்றுபுறச் சுவர் 2.40மீட்டர் உயரத்திற்கு மேல் கட்ட | „ | 300 | 900 | | |
| | 10) கிணறு, குழாய்கிணறு புதிதாக அமைக்கவும் திருத்தி அமைக்கவும் | ஒவ்வொரு இனத்திற்கும் | 300 | 900 | | |
| | 11) செப்டிக் டாங்க் அமைக்க | ஒவ்வொன்றிற்கும் | 300 | 1000 | | |
| | 12) மலஅறை, குளியல் அறை கட்ட | „ | 300 | 1000 | | |
| | 13) உயர்மட்ட தண்ணீர் தொட்டி | 2 சதுர மீட்டர் பரப்பிற்கும் அதன் பாகத்திற்கும் | 300 | 1000 | | |
| | 14) மாடி படி அமைக்க | ஒவ்வொரு மாடிக்கும் | 300 | 900 | | |
| | 15) கூடுதல் கட்டிட வரைபட நகல் | ஒவ்வொன்றுக்கும் | 400 | 800 | | |
| | 16) சேவை கட்டணம் | | 600 | 1200 | | |
| | **17) வளர்ச்சி கட்டணம்** | | | | | |
| | குடியிருப்பு | கட்டிடத்திற்கு | ரூ.8.00/– 1 சதுர மீட்டருக்கு | ரூ.50.00/– 1 சதுர மீட்டருக்கு | | |
| | | நிலத்திற்கு | ரூ.4.00/– 1 சதுர மீட்டருக்கு | ரூ.25.00/– 1 சதுர மீட்டருக்கு | | |
| | தொழில் நிறுவனங்கள் | கட்டிடத்திற்கு | ரூ.7.00/– 1 சதுர மீட்டருக்கு | ரூ.100.00/– 1 சதுர மீட்டருக்கு | | |
| | | நிலத்திற்கு | ரூ.3.00/– 1 சதுர | ரூ.50.00/– 1 சதுர | | |

| | | | |
|---|---|---|---|
| | | மீட்டருக்கு | மீட்டருக்கு |
| வணிக பயன்பாடு | கட்டிடத்திற்கு | ரூ.16.00/– 1 சதுர மீட்டருக்கு | ரூ.200.00/– 1 சதுர மீட்டருக்கு |
| | நிலத்திற்கு | ரூ.6.00/– 1 சதுர மீட்டருக்கு | ரூ.150.00/– 1 சதுர மீட்டருக்கு |

அலுவலகக்குறிப்பு

மேலூர் நகராட்சியில் மேற்கண்ட இனங்களுக்கு இதுநாள்வரை குறைந்த கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில் நகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறையாகவே இருந்து வந்தது. கட்டிட அனுமதி வழங்கப்படும் பகுதிகளில் சாலைகள், குடிநீர் வசதி, சாக்கடை வசதி, மற்றும் தெருவிளக்கு போன்ற மக்களின் அத்தியவசிய பணிகளை சரிவர மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் நகராட்சியின் நிதி பற்றாக்குறையை தவிர்த்து வருவாயினை பெருக்கும் நோக்கில் மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை 01.06.2020 முதல் வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.674/2020/எப்1

697

**மன்றப்பொருள் எண்.4**

அங்கீகரிக்கப்பட்டது

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 ன் கீழ் பணிகள் மேற்கொள்ள 04.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது .

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | சுந்தரப்பன் ஊரணி கரையில் பேவர் பிளாக் நடைபாதை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல். | 10.00 | திருமதி.அமுதா –0.30 % குறைவு | திரு.லத்திப் 1.60 % அதிகம் |
| 2. | சாலைக்கரையான ஊரணி கரையில் பேவர்பிளாக் | 10.00 | திரு. லத்திப் –0.25 % | திருமதி. பி.அமுதா 1.20 % |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>நடைபாதை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல்.</td><td></td><td>குறைவு</td><td>அதிகம்</td></tr>
<tr><td>3.</td><td>மேலூர் அண்ணா காலனியில் சிறுபாலம் மற்றும் பேவர்பிளாக் அமைத்தல்.</td><td>5.00</td><td>திருமதி.பி.அமுதா<br>–0.40 %<br>குறைவு</td><td>திரு.லத்திப்<br>1.80 % அதிகம்</td></tr>
</table>
பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. வ.எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திருமதி.பி.அமுதா என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. வ.எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திரு.லத்திப் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.25% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. வ.எண்.3ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திருமதி.பி.அமுதா என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.40% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>698</td>
<td>மன்றப்பொருள் எண்.5<br>
இந்நகராட்சிக்குச் சொந்தமான கனரக வாகனங்கள்TN59AZ 3449 மற்றும் TN59BS 9536 ஆகிய இரண்டு வாகனங்களுக்கு வாகன காப்பீட்டுத் தொகை மொத்தம் ரூ.78036/–க்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று கட்டணம் செலுத்தியமைக்கும் மன்றம்
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>699</td><td>
மன்றப்பொருள் எண்.6<br>
இந்நகராட்சி கொரோனா தடுப்பு பணியை முன்னிட்டு 01.05.2020 முதல் 31.05.2020 முடிய கீழ்க்கண்ட பணிகள் தமிழ்நாடு நகராட்சி விதிகள் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>Gloves, Mask, PPE, set supply 06.05.2020</td><td>Reliant Globle Green Engg Co</td><td>1,02,069</td></tr>
<tr><td>2</td><td>Corona Awareness Advertisement 11.05.2020</td><td>J.P.Book binding Electricals</td><td>2,17,500</td></tr>
<tr><td>3</td><td>Corona PVC, Water Tank supply 11.05.2020</td><td>S.Kanjana, Contractor</td><td>15,800</td></tr>
<tr><td>4</td><td>Corona social distance lining work 11.05.2020</td><td>M.latif, Contractor</td><td>16,300</td></tr>
<tr><td>5</td><td>Hand wash, Sanitizer supply 11.05.2020</td><td>TNMP -TRY</td><td>4,626</td></tr>
<tr><td>6</td><td>Lysol 100Litre 11.05.2020</td><td>TNMP –TRY</td><td>17,582</td></tr>
<tr><td>7</td><td>Lysol 500L & Sodium Hypo chlorite 1000L 11.05.2020</td><td>TNMP –TRY</td><td>1,66,380</td></tr>
<tr><td>8</td><td>Mask , Hand sprayer, Gloves, comboot, mopstick & P.Bucket supply 11.05.2020</td><td>TNMP –TRY</td><td>71,915</td></tr>
<tr><td>9</td><td>Lizol supply 900 L 11.05.2020</td><td>TNMP –TRY</td><td>1,58,238</td></tr>
<tr><td>10</td><td>CCTV camera centre baricard work 15.05.2020</td><td>S.Kanjana, Contractor</td><td>92,000</td></tr>
<tr><td>11</td><td>Baricard work at quarantine area 15.05.2020</td><td>S.Kanjana, Contractor</td><td>98,000</td></tr>
<tr><td>12</td><td>தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் சாமியானாபந்தல் அமைத்தல் 15.05.2020</td><td>S.Kanjana, Contractor</td><td>69,000</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 13 | Infrarel Thermameter supply 14.05.2020 | **JOJN forom Madurai** | **21,240** |

மேற்கண்ட பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

சென்னை நிதித்துறை கடித எண்.74.JS(MA) Finance (Salarires)/2020 நாள்.01.04.2020 ன்படி கோவிட்–19 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதிலிருந்து விலக்க.க்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.548/எச்1/2020

ந.க.எண்.600/எச்1/2020

ந.க.எண்.602/எச்1/2020

ந.க.எண்.603/எச்1/2020

700

## மன்றப்பொருள் எண்.7

அங்கீகரிக்கப்பட்டது

திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் சேவைக்கட்டணம்(SUC) நிர்ணயம் செய்து அதனை 24.05.2017 மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு கேட்பு எழுப்பப்பட்டு வசூல் பணியை துவங்.ய நிலையில் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை குறைத்து நிர்ணயம் செய்ய பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோரிக்கைகள் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு உபயோகிப்பாளர் சேவைக்கட்டணத்தை திருத்தியமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | விபரம் | காலம் | கட்டணம் ரூ. | **திருத்தியமைக்கப்படும் கட்டணம் மாதம் 1க்கு ரூ.** |
|---|---|---|---|---|
| 1.குடியிருப்பு | | | | |
| அ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | மாதம் | ரூ.20.00 | ரூ.**10.00** |
| ஆ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.501-1000க்குள்) | மாதம் | ரூ.30.00 | ரூ.**20.00** |
| இ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001-2000க்குள்) | மாதம் | ரூ.50.00 | ரூ.**30.00** |
| ஈ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்) | மாதம் | ரூ.100.00 | ரூ.**40.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.நிறுவனம் | | | | |
| அ. | தனியார் பள்ளி/கல்லூரி விடுதி/ தனியார் அலுவலக வளாகம் | மாதம் | ரூ.500.00 | **ரூ.100.00** |
| ஆ. | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் | ரூ.500.00 | **ரூ.100.00** |
| இ. | கிளினிக் | மாதம் | ரூ.300.00 | **ரூ.100.00** |
| 3. வணிகம் | | | | |
| அ. | டீஸ்டால் / சிற்றுண்டி | மாதம் | ரூ.100.00 | **ரூ.50.00** |
| ஆ. | நடமாடும் உணவகம் | தினமும் | ரூ.10.00 | **ரூ.10.00** |
| இ. | உணவகம் சிறியது | மாதம் | ரூ.250.00 | **ரூ.50.00** |
| ஈ. | உணவகம் பெரியது | தினமும் | ரூ.50.00 | **ரூ.50.00** |
| உ. | வணிக வளாகம் | தினமும் | ரூ.50.00 | **ரூ.50.00** |
| ஊ. | திருமண மண்டபம் | நிகழ்வு ஒன்றுக்கு | ரூ.500.00 | **ரூ.500.00** |
| எ. | தையல் கடை | மாதம் | ரூ.100.00 | **ரூ.50.00** |
| ஏ. | இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் | ரூ.100.00 | **ரூ.20.00** |
| ஐ. | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் | ரூ.250.00 | **ரூ.20.00** |
| ஒ. | தேங்காய்/பூ/பழம்/காய்கறிகள் வியாபாரம் | மாதம் | ரூ.100.00 | **ரூ.50.00** |
| ஓ. | பலசரக்கு/ஸ்டேசனரி/மருந்தகம் | மாதம் | ரூ.100.00 | **ரூ.50.00** |
| ஔ. | வாழைத்தாள் கமிஷன் மண்டி | மாதம் | ரூ.500.00 | **ரூ.50.00** |
| 4. மற்றவை | | | | |
| அ. | மட்டன்/சிக்கன்/மீன் ஸ்டால் | மாதம் | ரூ.100.00 | **ரூ.50.00** |
| ஆ. | சினிமா தியேட்டர் | மாதம் | ரூ.500.00 | **ரூ.100.00** |
| இ. | ஜவுளி கடை வியாபாரம் | மாதம் | ரூ.500.00 | **ரூ.50.00** |
| ஈ. | தோல் , ரெக்ஷின் பை தயார் செய்தல், காலணி விற்பனை, தயார் செய்தல், காலணி விற்பனை | மாதம் | ரூ.100.00 | **ரூ.50.00** |
| உ. | மரக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ.100.00 | **ரூ.20.00** |
| ஊ. | தோட்டக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ.100.00 | **ரூ.50.00** |
| எ. | வீட்டுத் தோட்டக் கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ.100.00 | **ரூ.50.00** |

அலுவலகக்குறிப்பு

அ. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ. மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான கட்டணத்தை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 701 | **மன்றப்பொருள் எண்.8**<br>கொரோனா (Covid-19) வைரஸ் நோய் விழிப்புணர்வு விளம்பரம் தினத்தந்தி மற்றும் தினமலர் நாளிதழ்களில் வெளியிடப்பட்டமைக்கு விளம்பரக்கட்டணம் முறையே ரூ.29400/– மற்றும் ரூ.24333/ஐ நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.